*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 2
May - 2022

# சிலம்பு உணர்த்தும் இறைவழிபாடு

தனலட்சுமி, அ.
அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆனந்த் நகர், கிருஷ்ணன் கோயில்
தமிழ்நாடு, இந்தியா

**Corresponding author:dhanalakshmia01011993@gmail.com.**

**ஆய்வுச் சுருக்கம்**

சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். அரசர்கள், மக்களுள் சிறந்த தலைவர்கள், தெய்வத்தைப் பற்றி காப்பியங்கள் எழுந்த காலகட்டத்தில் சாதாரண குடிமக்களை பற்றி முதலில் தோன்றிய காப்பியம் ஆதலால் இது முதற்காப்பியம் என்றும், குடிமக்கள் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. இயல், இசை, நாடகம் பற்றிக் கூறும் காப்பியம் ஆதலால் முத்தமிழ் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய சிறப்பினை உடைய காப்பியத்தில் உள்ள இறைவழிபாட்டினை உணர்த்தும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது. இயற்கை வழிபாடே பின்னர் இறைவழிபாடாகத் தேன்றியிருக்கலாம் என்பதை சிலப்பதிகார காப்பியத்தின் வழி அறியமுடிகிறது. கொற்றவை வழிபாடே பின்னர் துர்க்கை வழிபாடாகத் தோன்றியிருக்கலாம். தற்காலத்தில் பெரும்பாலான மக்கள் வழிபடுகின்ற அய்யனார் என்ற தெய்வத்தை சிலப்பதிகாரத்தில் சாஸ்தா என்ற பெயரில் வணங்கியிருக்கலாம் என்பதையும் இக்காப்பியத்தின் வழி அறியமுடிகின்றது. மக்களிடையே காணப்படும் சிறுதெய்வ வழிபாடானது காப்பிய இலக்கியத்தில் இருந்தது என்பதையும் அறியமுடிகிறது. இப்பொழுது மக்கள் காவல் தெய்வமாகக் கருதி வணங்குகின்ற அய்யனார், கொற்றவை, கருப்பசாமி போன்ற தெய்வங்களை வழிபடும் முறை காப்பிய காலத்தில் இருந்தது என்பதையும் அறியமுடிகின்றது.

**கருச்சொற்கள்: வழிபாடு முறைகள், இயற்கை வழிபாடு, கொற்றவை வழிபாடு, சாஸ்தா வழிபாடு**

**முன்னுரை**

ஐம்பெருங்காப்பியங்களுள் முதலாவதாகக் கூறப்படுவது சிலப்பதிகாரக் காப்பியம் ஆகும். கடவுளையும், மன்னர்களையும் போற்றிய காலத்தில்

சாதாரண குடிமக்கள் குறித்துக் காப்பியம் எழுதப்பட்டதால் இது குடிமக்கள் காப்பியம் என்றும் முதற்காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. முத்தமிழையும் குறித்துக் கூறுவதால் முத்தமிழ்க் காப்பியம் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சிலப்பதிகாரத்தில் காணப்படும் இறைவழிபாட்டு முறைகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு

'வழிபாடு' என்பது 'வழிபடு' என்ற சொல்லிலிருந்து தோன்றி இருக்கலாம். வழிபடு என்பதற்கு 'வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனை செய்தல்' என்று அகராதிகள் பலவாறு பொருள் தருகின்றன. இறைவனை மகிழ்விப்பதற்காகச் செய்யப்படும் பூசை முறைகளையே வழிபாடு என்றும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதையே வழிபாடு என்றும் கூறலாம்.

ஆரம்பத்தில் இயற்கையை வழிபட்ட மனிதன் காலமாற்றத்தினாலும், பண்பாட்டு வளர்ச்சியாலும், தான் வழிபட்ட அந்த இயற்கைப் பொருட்களுக்கெல்லாம் சில உருவங்களைக் கொடுத்திருக்கலாம். இவ்வாறு தான் இயற்கை வழிபாடு உருவ வழிபாடாக மாறியிருக்கும்.

## வழிபாட்டு முறைகள்

வழிபாட்டினை மனிதர்கள் சிறுதெய்வவழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என இருவகையாகப் பிரித்துள்ளனர். பெருந்தெய்வ வழிபாடு என்பது ஆகம முறைப்படி அந்தணர்களால் பூசை செய்யப்படுவதாகும். பிறப்பு, இறப்பு அற்றது ஆகும்

சிறுதெய்வவழிபாடு என்பது பிறப்பு, இறப்பு உடையது. இது மக்களோடு மக்களாக வாழ்ந்து மற்ற உயிர்களுக்குத் துன்பம் நேரும் பொழுது தன் உயிரைக் கொடுத்துப் பிற உயிர்களைக் காப்பாற்றியவர்களைத் தெய்வங்களாக வைத்து வணங்குவது ஆகும். இவ்வாறு வணங்கும் பொழுது அவர்களுக்குப் பிடித்த அசைவ உணவுகளே படையலாகக் கொடுக்கப்படுகின்றது. பெரும்பாலும் சிறுதெய்வங்கள் என்பவை குலதெய்வங்களாகவே இருக்கின்றன.

## இயற்கை வழிபாடு

பண்டைக்கால மனிதன் நாடோடியாகத் தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினான். அவ்வாறு, நாடோடி வாழ்வினைத் தொடங்கிய மனிதன் இயற்கைச் சீற்றங்களுக்கும், காட்டு விலங்குகளுக்கும் அஞ்சி வாழ்ந்துள்ளான். அப்படி, அவன் எவற்றை எல்லாம் கண்டு அஞ்சினானோ அவற்றை எல்லாம் வழிபடத் தொடங்கினான். இவ்வாறு, வழிபடத் தொடங்கிய. மனிதன் முதலில் இயற்கையைத் தான் வழிபட்டுள்ளான்.

ஆதிமனிதனின் இயற்கை வழிபட்டை சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலே காணலாம்.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண்குடை**
**போன்று"[1]**

**(சிலம்பு. மங்கல.வா.பா. 1-2)**

என்று இளங்கோவடிகள் தொடங்கியுள்ளார். இளங்கோவடிகள் குளிர்ச்சி பொருந்திய திங்களைத் தான் முதலில் கூறியுள்ளார். பின்பு

**"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரிபோல் பொன்கோட்டு**
**மேரு வலந்திரி தலான்" [2]**

**(சிலம்பு. மங்கல.வா.பா. 4-6)**

என்று ஞாயிற்றை (சூரியனை) வணங்கியுள்ளார்.

மழை பெய்யாவிட்டாலும், அதிகமாகப் பெய்தாலும் மனிதர்களுக்குத் தீங்கு தரக்கூடியதாகும். மழை இல்லாத காலங்களில் மழை வேண்டி வேள்விகளும், பூசைகளும் செய்துள்ளனர். திருப்பாவை நூலில் ஆண்டாள்,

**"ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம் போல்மெய்**
**கறுத்துப்**
**…………………………………..-[3]**

**(திருப்பாவை பா. 4)**

என்று மழை வேண்டிப் பாடல் பாடியுள்ளார்.

மழை அதிகமாகப் பொழிந்த காலங்களில் அதனை நிறுத்துவதற்கும் பாடல்பாடி வழிபாடு செய்துள்ளனர். புறநானூற்றில் கபிலர் தம் பாடலில் மழையை நிறுத்துவதற்காகச் செய்த வழிபாட்டினைக் கூறியுள்ளார்.

**"மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்**
**மாரி ஆன்று மழைமேக்கு உயர்கெனக்**
**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
**பெயல்கண் மாறிய உவகையர் சாரற்**
**புனத்தினை அயிலும் நாட" [4]**

**(புறம் - 143)**

என்ற பாடலின் வழி அறியலாம்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் தம் பதிகத்தில் மழை பெய்யவும் மழை நிற்கவும் வேண்டி நாட்டுமக்கள் செய்த வழிபாட்டினைக் கூறியுள்ளார். திருப்புன்கூர் பதிகத்தில் இடம்பெற்றுள்ள,

**"வையகம் முற்றும் மாமழை மறந்து**
**… … ……… ………**
**செழும் பொழில் திருப்புன்கூர் உளானே" [5]**
**(அந்தணாளன் உன அடைக்கலம் புகுந்த**
**பதிகம் பா. 2)**

என்ற பாடல் வழி இதனை அறிந்து கொள்ளலாம்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய மழையை இளங்கோடிவகளும் போற்றியுள்ளார்.

**"மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்**
**நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்று தான் சுரத்தலான்" [6]**

**(சிலம்பு.மங்கல.வா.பா. 7-9)**

என்ற பாடல் அடி வழியாகச் சிறப்புப் பொருந்திய மழையை வணங்குவோம், அச்சத்தை உண்டாக்கும் கடலினை

வேலியாகக் கொண்டு உலகம் சுழன்றாலும் சோழ மன்னன் எப்படித் தன் மக்களுக்கு அருள்பாலிப்பானோ அதுபோல வானத்திலிருந்து நீரைப்பொழிந்து மழை உலக உயிர்களை வாழவைக்கின்றது என்கிறார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய மழையைப் பார்த்தும் மக்கள் பயந்ததால் மழையை ஒரு தெய்வமாகவே வழிபட்டுள்ளனர். நாட்டுப்புற வழக்கில் யாரு கடன் இருந்தாலும் மாரி கடன் இருக்கக்கூடாது என்று கூறுவர். மாரியம்மனை மழைக்குரிய தெய்வமாகக் கருதி வழிபட்டுள்ளனர் என்பதையும் அறியலாம்.

**கொற்றவை வழிபாடு**

கொற்றவையைப் போர்க்குரிய கடவுளாகப் பண்டைத் தமிழர்கள் வழிபட்டுள்ளனர். கொற்றவை குறித்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பல தகவல்களைச் சிலப்பதிகாரத்திற்கு முந்தைய நூல்கள் கூறினாலும் கொற்றவை குறித்த விரிவான பல தகவல்கள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாட்டின் சிறப்பியல்புகளையும், வழிபாட்டு முறைகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்.

இக்கால மக்கள் கொற்றவை என்பதைக் காளியின் மறு உருவமாகவும் கருதுகின்றனர். துர்க்கை அம்மனையே பண்டைக்கால மக்கள் கொற்றவை என்றும் கருதியிருக்கலாம் என இன்றைய மக்கள் கருதுகின்றனர். கொற்றவையை, சமஸ்கிருதத்தில் துர்க்கை என்று அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

வேட்டுவ வரியில் இடம் பெற்றுள்ள பாடல் அடிகள் முழுவதும் கொற்றவையின் தோற்றம், வழிபாட்டு முறைகள் ஆகியவை குறித்துக் கூறுகின்றன. இந்திரவிழா காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள காவல் பூதத்திற்க்குப் பெண்கள் பூசை செய்து வணங்குகிறார்கள். காவல் பூதத்தின் பலி பீடத்தில் அவரை, துவரை, எள்ளுருண்டை, இறைச்சியுடன் கூடிய சோறு, கள் முதலியவைகளைப் படைக்கின்றனர் என்று அன்று வழக்கத்திமல் இருந்த நாட்டுப்புற வழக்காற்று முறையை இளங்கோவடிகள் கூறியுள்ளார். இதனை,

> **“காவல் பூதத்துக் கடைகெழு பீடிகைப்**
> **புழுக்கலும் நோலையும் விழுக்குடை**
> **மடையும்**
> ---------- -------------- ------------- ---------- ----
> **வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி”**
> **(சிலப்பதிகாரம், இந்திர விழவு ஊர் எடுத்த காதை,**
> **அடிகள் 67 – 73)**

என்று அடிகளின் வழி அறியமுடிகிறது.

தமிழில் நமக்குக் கிடைத்த காலத்தால் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் கொற்றவை நிலை குறித்துக் கூறப்பட்டுள்ளது. கொற்றவையைப் போருக்குரிய தெய்வமாகப் பழந்தமிழர் பார்த்துள்ளனர் என்பதையும் அறியலாம்.

கலித்தொகையில், பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடி சொல்வது போல என்னும் பொருள்படும் “பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'' (கலி. மருதம். 89) என்னும் அடி உள்ளது. பரிபாடலிலும் ‘‘நெற்றி விழியா நிறைத்திலகம் இட்டாளே கொற்றவை கோலங் கொண்டோர் பெண்'' (பரிபாடல்- 128) என்ற அடியில் கொற்றவை குறித்த குறிப்பு வருகின்றது. திருமுருகாற்றுப் படையில் “வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ இழையணி சிறப்பிற் பழையோள் குழவி” (திருமுருக.படை 259) என்ற அடிகளில் கொற்றவைக் குறித்த செய்தி இடம் பொற்றுள்ளன. பெரும்பாணாற்றுப் படையில் முருகனைப் பெற்ற வயிற்றினை உடைய இறைவி என்று “கடுஞ்சூர் கொன்ற பைம்பூட் சேஎய் பயந்த மாமோட்டுத் துணங்கை அம் செல்வி” (பெரும்பாணாற்றுப்படை 460) என்று கூறியுள்ளனர். இவ்வாறான கொற்றவை வழிபாடு பழங்காலம் தொட்டு இன்று வரை வழிபாட்டில் இருந்து வருகின்றனது.

கொற்றவை கானகத்தில் உறையும் மறவர்களுடைய கடவுள் என்று அகநானூற்றுப் பாடல் வழி அறியலாம். அவை “ஓங்கு புகழ் கானமர் செல்வி” (12) (அகம் - 345, அடிகள் 4-5) என்று குறிப்பிடுகிறது. இதனை நோக்கும் போது முதலில் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதப்பட்ட கொற்றவை, குறிஞ்சி நிலம் தன் இயல்பில் திரிந்து பாலை நிலமாகிய போது, பாலை நிலத்திற்குரிய தெய்வமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கும் இடமிருக்கின்றது.

### சாஸ்தா வழிபாடு

சிலப்பதிகாரத்தில் சாஸ்தாவைக் குறித்து பல குறிப்புகள் காணப்படுகின்றன. கனாத்திற முரைத்த காதையில் பாசண்ட சாத்தன் பற்றிய குறிப்பும் வரலாறும் இடம்பெற்றிருக்கிறது. சாத்தன் கோயிலைச் சிலம்பு புறம்பணையான் கோட்டம் என்று கூறுகிறது. அந்தத் தெய்வத்தை நம்பி வருபவர்களைக் காத்து நின்றது என்பதையும் அறிய முடிகின்றது.

மாலதி என்ற அந்தணப் பெண்ணினால் ஒரு குழந்தை இறந்து விடுகிறது. பின்பு அவள் பாசண்ட சாத்தனை வேண்டுகிறாள். அவளுடைய துயரத்தைக் களைவதற்காக அந்தத் தெய்வமே ஒரு குழந்தையாகப் பிறக்கின்றது. பின்பு கண்ணகியின் தோழியான தேவந்தியைத் திருமணம் செய்து கொண்டு அவளுக்கு மட்டும் தன் ‘மூவா இளநலம் காட்டி’ என் கோவிலுக்கு நாள்தோறும் வா என்று கூறித் திருத்தலங்களுக்கு யாத்திரை செல்வது போல் சென்று விட்டதாகச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. அந்தப் பெண் பாசண்ட சாத்தனை வழிபடுவதன் மூலம் சிலப்பதிகாரக் காலத்தில் சாஸ்தா வழிபாடு இருந்ததை அறிய முடிகின்றது.

### முடிவுரை

பண்டைக் கால மனிதன் தான் எவற்றை எல்லாம் கண்டு அச்சம்

கொண்டானோ அவற்றை எல்லாம் வழிபட ஆரம்பித்துள்ளான். அவ்வாறு அவன் வழிபட ஆரம்பித்ததன் மூலமே இறைவழிபாடு உருவாகியிருக்கும் என்பதை பண்டை நூல்களின் மூலம் அறியமுடிகின்றது. கொற்றவை என்ற பெண் தெய்வ வழிபாடே இன்றை துர்க்கை வழிபாட்டிற்கு அடிப்படை என்பதையும், பாசண்ட சாத்தன் என்ற தெய்வத்தின் வழிபாடே சாஸ்தா வழிபாட்டிற்கு அடிப்படை என்பதையும் இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்


1. சாமிநாதையர், உ.வே (1996). பத்துப்பாட்டு, ஜனகா பதிப்பகம்,.
2. புலியூர்க்கேசிகன் (2011). முக்கூடற் பள்ளு, தெளிவுரை, பாரி நிலையம்,.
3. விகடன் பிரசுரம், (2014). திருப்பாவை,
4. துரைச்சாமி பிள்ளை, சு. (2007) ஔவை புறநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
5. துரைச்சாமி பிள்ளை, சு. (2007). ஔவை அகநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
6. சு.துரைச்சாமி பிள்ளை, (2007). ஔவை கலித்தொகை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
7. நடராசன், பி.ரா. (2018). பெரியபுராணம் மூலமும் உரையும், புலவர் கௌரா பதிப்பகம்,
8. ஜார்லால, கே.ஜி. (2010). சிலப்பதிகாரம், கிழக்குப்பதிப்பகம்,